வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 20.05.2026 புதன்கிழமை இதழ் : 134 பக்கங்கள் : 08

# எந்தவொரு இனவாதக் குழுவுக்கும் நாடு மீண்டும் இரையாகக்கூடாது!

## போர் வெற்றி நிகழ்வில் ஜனாதிபதி அநுர சபதம்

கொழும்பு, மே. 20

"இனவாதத்தின் கூச்சல்களையும், மத தீவிரவாதத்தின் கூச்சல்களையும் மற்றும் குழப்பங்களை விளைவிக்கும் குழுக்களின் கூச்சல்களையும் நாம் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். இந்த நாடு எக்காரணம் கொண்டும் மீண்டும் எந்தவொரு இனவாத அல்லது தீவிரவாதக் குழுவுக்கும் இரையாக இடமளிக்கக் கூடாது. அதற்காக நான் உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்."



இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க.

பத்தரமுல்லையில் உள்ள படையினர் நினைவுத் தூபிக்கு அருகில் நேற்று பிற்பகல் நடைபெற்ற 17ஆவது தேசிய படையினர் தின நினைவு நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து பெற்ற வெற்றியை நினைவு கூரும் தேசிய படையினர் தின நினைவு நிகழ்வு, முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

07

# யுத்தம் பாதித்த மக்களுக்கு ஜெனீவாவில் தீர்வு இல்லை!

## உள்நாட்டுக்குள்ளேயே அதனை நாம் வழங்கவேண்டும் என்கிறார் சஜித்



கொழும்பு, மே. 20

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாக நாட்டில் பல்வேறு இனப் பிரிவினர்கள் காணப்படுகின்றனர். பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்னைகளுக்கு நாங்கள் தீர்வுகளை வழங்க வேண்டும். அந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்கவேண்டியது ஜெனீவாவில் அல்ல. எமது

07

# உயிர்த்தியாகம் செய்த படையினருக்கு கௌரவம் வழங்கத் தவறிவிட்டது அரசு!

## நாமல் ராஜபக்ஷ சபையில் குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 20

30 வருட கால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், அன்றைய காலகட்டத்தில் இராணுவத்தினரும் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் செய்த அர்ப்பணிப்புகளை

07

## உள்நாட்டுப் போர் முடிவடைந்து 17 வருடங்கள்:

# பாதிக்கப்பட்ட இலங்கை தமிழர்களுக்கு உண்மை, நீதி, இழப்பீடு அவசரம் தேவை!

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, மே. 20

இலங்கையின் உள்நாட்டு ஆயுத மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இன்றுடன் 17 ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில், போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்குவதற்கான அவசரத் தேவையை சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

போரின்போதும், அதன் இறுதிக் கட்டத்திலும் உயிரிழந்த தங்களது உறவுகளின்

07

# மகிந்தவுக்கு அழைப்பில்லை!

கொழும்பு, மே. 20

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு, தேசிய பாதுகாப்பு தின கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்கான உத்தியோகபூர்வ அழைப்பு கிடைக்கவில்லை என அவரது சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

இந்த நினைவுத் தின நிகழ்வில் மகிந்தவை தவிர்ப்பதற்கான தீர்மானம் தொடர்பிலும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக

07

# பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பதைத் தடுக்கும் சட்டமூலம் நாட்டின் அரசமைப்புக்கு உட்பட்டதே!

## உயர்நீதிமன்ற தீர்ப்பை சபையில் அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, மே. 20

சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த 'பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுக்கும் உடன்படிக்கை (திருத்த) சட்டமூலம்' நாட்டின் அரசியலமைப்புக்கு முழுமையாக இணங்கக்கூடிய வகையில் அமைந்துள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தத் தீர்ப்பு விவரத்தைச்

07

# இந்தியா-இலங்கை இடையே தரைப்பாலம் பெரும் பொருளாதார நன்மைகள் கிட்டும்!

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

கொழும்பு, மே. 20

இந்தியா மற்றும் இலங்கையை இணைக்கும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள தரைப்பாலம் மூலம் இலங்கைக்குப் பாரிய பொருளாதார நன்மைகள் கிடைக்க வாய்ப்புள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்டுள்ள புதிய கொள்கை விளக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய-இலங்கை தரைவழி இணைப்பை மதிப்பிடுதல் என்ற

07

# மின் கட்டணங்களில் மாற்றங்கள் இல்லை

கொழும்பு, மே. 20

மின் கட்டணங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் செப்ரெம்பர் மாதம் வரை மின் கட்டணத்தில் திருத்தங்கள் இல்லை என்றும் வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று

07

# இரத்தப் புற்றுநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க நாடு முழுவதும் 4 விசேட வைத்தியர்கள் மட்டுமே!

கொழும்பு, மே. 20

இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த இரத்தப் புற்றுநோயாளிகளுக்கும் சிகிச்சையளிப்பதற்காக நாடு முழுவதும் வெறும் 4 விசேட மருத்துவ நிபுணர்கள் மாத்திரமே பணியில் உள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மஹரகம புற்றுநோயியல் மருத்துவமனையின் இரத்தப் புற்றுநோய் பிரிவின் தரவுகளின்படி, இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 2,000 இரத்தப் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் புதிதாகப் பதிவாவதாக

07

# விமலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, மே. 20

பாராளுமன்ற விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள யுத்த வீரர்கள் நினைவிடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒத்திகைப்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசியல் கருவியாகியுள்ளது இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு!

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 20

பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள எதிர்க் கட்சியினரை ஒடுக்குவதற்காக, ஜே.வி.பி மற்றும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கைகளில் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு ஒரு அரசியல் கருவியாக மாறியுள்ளதாக கூட்டு எதிரணி குற்றம் சாட்டியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிளவர் வீதி காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படுபவர்களைத் தங்களுக்குத் தேவையானவாறு கையாண்டு, அரசியல் எதிரிகளுக்கு எதிராகப் பொய் வழக்குகளை இந்த நிறுவனம் சோடித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த நிறுவனத்தின் இத்தகைய கொடூரமான செயல்பாடுகள் மக்களைத் தற்கொலைக்குத் தூண்டும் அளவுக்கு அமைந்துள்ளதாகவும் அவர் மிகக் கடுமையாகச் சாடியுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் 2 மில்லியன் அமெரிக்க டொலர் ஏயார்பஸ் ஊழல் விசாரணையில், பிணையில் இருந்தபோது தற்கொலை செய்துகொண்ட சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை



நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன, இந்தத் தப்பிலாத உத்தியின் ஒரு பலியாவார் எனப் பேராசிரியர் பீரிஸ் குற்றம் சாட்டினார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமும், முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியுமான ரங்க திஸாநாயக்க, தமக்கு முழுமையாக ஒத்துழைக்கத் தவறினால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என கபில சந்திரசேனவை மிரட்டியிருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஓட்டோ கட்டண திருத்தம் புதிய விதிமுறை ஜூனில்!

கொழும்பு, மே. 20

ஓட்டோ கட்டணத் திருத்தங்கள் மற்றும் சாரதிகளுக்கான புதிய ஒழுங்குமுறை விதிமுறைகளை உள்ளடக்கிய சட்டமூலம், எதிர்வரும் ஜூன் மாத தொடக்கத்தில் வர்த்தமானியில் வெளியிடுவதற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஓட்டோ சாரதிகளால் தன்னிச்சையாகக் கட்டணங்கள் உயர்த்தப்படுவதைத் தடுத்து, நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இந்த புதிய விதிமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பொறியியலாளர் பி.ஏ. சந்தி ரபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொழும்பு போன்ற பிரதான நகரங்கள், புறநகர்ப் பகுதிகள் மற்றும் கண்டி போன்ற மலைநாட்டுப் பிராந்தியங்களில் நிலவும் எரிபொருள் நுகர்வு வேறுபாடுகள் மற்றும் சாரதிகளின் நடைமுறைச் சிக்கல்களைக் கருத்திற்கொண்டே இந்த புதிய கட்டணத் திருத்தங்கள் வரைபு செய்யப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எவ்வாறாயினும், ஓட்டோ கட்டணங்களை நிர்ணயிக்கும் அதிகாரத்தைத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தன்வசம் ஈர்த்துக்கொள்வது குறித்து அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு மத்தியில் தம்மால் கட்டணங்களை உயர்த்த முடியாமல் போனால் சாரதிகள் பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும் எனவும் அது எச்சரித்துள்ளது. (அ)

# பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தலுக்கு சகல அரச நிறுவனங்களிலும் தடை!

கொழும்பு, மே. 20

அனைத்து அரச நிறுவனங்களிலும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்கும், பயன்படுத்துவதற்கும் அரசாங்கம் முழுமையாகத் தடை விதித்துள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள விசேட சுற்றறிக்கையின் ஊடாக இந்த அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் அனைத்து அரச நிறுவனங்களிலும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களின் பயன்பாடு முற்றாகத் தடை செய்யப்படவுள்ளதுடன், அரச நிறுவனங்களுக்குள் இவ்வாறான பிளாஸ்ரிக் பொருள்கள் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கு அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# பியர் உற்பத்திக்கு அரிசி, சர்க்கரை பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது!

## மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு

கொழும்பு, மே. 20

பியர் உற்பத்திக்கான முதன்மை மூலப்பொருள்களான அரிசி மற்றும் சர்க்கரையைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கக் கூடாது என மதுவரி ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட தரப்பினருக்கு உத்தரவிடுமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பேராணை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் பெற்ற மதுபான சில்லறை விற்பனையாளர்கள் குழுவொன்றினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில், மதுவரி ஆணையாளர் நாயகம், மதுவரித் திணைக்கள அதிகாரிகள், இலங்கை தரக் கட்டளை நிறுவனம் சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பல தரப்பினர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

மதுவரி கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் கீழ், பியர் என்பது முளைக்கட்டிய தானியத்திலிருந்து) தயாரிக்கப்படும் ஒரு புளித்த மதுபானம் என வரையறுக்கப்பட்டுள்ள போதிலும், தற்போதைய பெரும்பாலான உற்பத்தியாளர்கள் அதற்கு மாறாக அரிசி மற்றும் சர்க்கரையை முதன்மை மூலப் பொருட்களாகப் பயன்படுத்துவதாக மனுதாரர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் பாரிய பொது மானியங்களின் கீழ் உற்பத்தி செய்யப்படும் அரிசி, பியர் போன்ற வணிகத் தொழில்துறைகளுக்குத் திருப்பி விடப்படுவதால், அது தேசியப் பொருளாதாரத்தில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன், நெல் உற்பத்தியில் இலங்கை சுயதேவை நிறைவை அடைவதைத் தடுக்கும் சூழ்நிலையை உருவாக்குவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# பெண்ணிடம் தங்கச் சங்கிலி அறுத்துக் கொண்டு தப்பியவர்களை மடக்கிப் பிடித்தனர் பொலிஸார்!

## பருத்தித்துறைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே. 20

பருத்தித்துறை பகுதியில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட கொள்ளையர்கள், நெல்லியடி ஊடாக தப்பிச் செல்லும் போது நெல்லியடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

பருத்தித்துறை பகுதியில் வீதியில் நின்ற பெண்ணொருவரின் ஒரு பவுண் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றனர்.

வீதியில் நின்ற ஏனையவர்கள் மடக்கிப் பிடிக்க முற்பட்ட போதிலும் அவர்கள் தமது மோட்டார் சைக்கிளில் வேகமாக தப்பிச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிள் இலக்கத்தை குறித்துக்கொண்ட மக்கள், அது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

விரைந்து செயற்பட்ட பொலிஸார் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் சம்பவம் தொடர்பில் அறிவித்ததை அடுத்து, நெல்லியடிப் பகுதி ஊடாக குறித்த மோட்டார் சைக்கிளில் இருவரும் தப்பிச் செல்வதை கண்டு நெல்லியடிப் பொலிஸார் இருவரையும் மடக்கிப் பிடித்தனர்.

விசாரணைகளின்போது அறுக்கப்பட்ட தங்கச் சங்கிலியையும் அவர்களின் உடைமையில் இருந்து மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக கொள்ளையர்களை பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

# மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்து; படுகாயமடைந்த மாணவன் உயிரிழப்பு

கிளிநொச்சி, மே. 20

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த பாடசாலை மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பரந்தன் பகுதியில் மாணவன் தனது சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது, பின்னால் அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மாணவன், உடனடியாக மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக மோட்டார் சைக்கிள் ஓட்டி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# யாழில் விசாரணைக்குச் சென்றவர் பொலிஸ் நிலையத்தில் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே. 20

யாழ்ப்பாணத்தில் பொலிஸ் விசாரணைக்கு அழைக்கப்பட்ட நபர், பொலிஸ் நிலையத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நாவாந்துறை பகுதியை சேர்ந்த ப.சுரேஷ்குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விசாரணைக்காக நேற்று முன்தினம் திங்கள்கிழமை யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலையத்துக்கு சுரேஷ்குமார் அழைக்கப்பட்ட நிலையில், பொலிஸ் நிலையத்தில் திடீரென மயங்கி விழுந்துள்ளார்.

அவரை பொலிஸார் உடனடியாக மீட்டு , யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# 5,289 முப்படையினக்கு பதவி உயர்வு!

கொழும்பு, மே. 20

17 ஆவது தேசிய போர் வீரர்கள் நினைவு தினத்தை முன்னிட்டு, மொத்தம் 5,289 முப்படையினர் தத்தமது அடுத்த கட்ட பதவிகளுக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

நாட்டுக்கு அவர்கள் ஆற்றிய அர்ப்பணிப்புமிக்க சேவையைப் பாராட்டும் விதமாக, அவர்களுக்கு அடுத்தடுத்த பதவிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பதவி உயர்வுகள் அந்தந்த சேவைத் தளபதிகளின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், முப்படைகளின் நிறுவப்பட்ட நிர்வாக நடைமுறைகளுக்கு இணங்கவும் வழங்கப்பட்டுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

20.05.2026 புதன்கிழமை

பராபவ வருடம், வைகாசி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**

**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**

- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# மகிந்த ராஜபக்சவும் போர் வெற்றிக் கௌரவமும்

போர் வெற்றிக்கு உரிமை கொண்டாடும் தகுதி தங்களுக்கு மாத்திரமே பிரத்தியேகமானது என்பது ராஜபக்சாக்களின் எண்ணம். ஜனாதிபதியாக அரசியல் தலைமைத்துவத்தை தானும் பாதுகாப்பு செயலாளராக முப்படைகளுக்கு வழிகாட்டலை சகோதரர் கோட்டாபய ராஜபக்சவும் வழங்கியிருக்காவிட்டால் போரில் விடுதலை புலிகளை தோற்கடித்திருக்க முடியாது என்பது மகிந்த ராஜபக்சவின் நினைப்பு.

போரை வென்றதற்காக சிக்கள மக்கள் தங்களுக்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டவர்கள் என்று கருதிய ராஜபக்சாக்கள் தங்களை அதே மக்கள் வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்து ஆட்சியில் இருந்து விரட்டியடிப்பார்கள் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள்.

அதிகாரத்தில் இல்லாவிட்டாலும், முப்படைகளுக்கு ஆதரவாக எப்போதுமே அவர்கள் பேசிவருகிறார்கள். மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டுமானால், போர் வெற்றி பற்றிய நினைப்பும் இனவாதமுமே தங்களுக்கு கைகொடுக்கும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் வாரிசான நாமல் ராஜபக்சவும் அதே பாணியிலேயே சிந்திக்கிறார் என்பதை சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகள் தொடர்பில் அவர்கள் கூறிவரும் கருத்துக்கள் வெளிக்காட்டுகின்றன.


போரின் முடிவுக்கு பிறகு 17 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு கருத்து தெரிவித்த மகிந்த ராஜபக்ச முப்படைகளும் செய்த தியாகங்கள் காரணமாகவே இலங்கை பிளவுபடாத நாடாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார். "போர் நாயகர்களுக்கு" தனது நன்றியைத் தெரிவித்த அவர் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட தினத்தை (மே 18) ஒருபோதும் மறக்கக்கூடாது என்று வலியுறுத்தினார்.

அதேவேளை, ராஜபக்சாக்களின் விசுவாசியான முன்னாள் கடற்படைத் தளபதியும் பொதுப் பாதுகாப்பு அமைச்சருமான சரத் வீரசேகர நேற்றைய தினம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் செய்தியாளர்கள் மகாநாட்டில் பேசிய போது சர்வதேச நாடுகளின் கடுமையான நெருக்குதல்களுக்கு பணிந்து விடாமல் உறுதியாக நின்று போர் வெற்றியைப் பெற்றுக் கொடுத்தவர் என்பதால் அதற்கான முழுப் பொறுப்பும் கௌரவமும் மகிந்த ராஜபக்சவுக்கே உரித்தானது என்று குறிப்பிட்டார்.

போரின் முடிவுக்கு பிறகு தங்களது குடும்ப அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக சிங்கள மக்களை போர் வெற்றிக் குதூகலத்தில் மிதக்க விடும் அணுகுமுறைகளை மகிந்த ராஜபக்ச கடைப்பிடித்து மேலும் இனவாதத்தை வளர்த்தாரே தவிர, இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது குறித்து பொறுப்புள்ள அரசியல் தலைவராக சிந்திக்கவேயில்லை.

போர் வெற்றி காரணமாக சிங்கள மக்கள் மத்தியில் அமோக ஆதரவைக் கொண்டவராக மகிந்த ராஜபக்ச விளங்கினார். தனக்கு அந்த மக்கள் மத்தியில் இருக்கும் ஆதரவைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு வசதியான முறையில் அவர்களின் மனங்களை வென்றெடுப்பதற்கான வரலாற்று வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

போர் முடிந்த கையோடு குறைந்த பட்சம் அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தையாவது முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவர் அரசியல் துணிச்சலை வெளிக்காட்டியிருந்தால் தென்னிலங்கையில் எதிர்ப்புக் கிளம்பியிருக்க வாய்ப்பில்லை. போருக்கான காரணிகளை இல்லாமல் செய்து நிரந்தரமான அமைதிக்கு வழிவகுத்த தலைவர் என்ற பெருமையை தனதாக்கிக் கொள்வதற்கான வரலாற்று வாய்ப்பை தவறவிட்டதை என்றைக்காவது அவர் நினைத்துப் பார்ப்பாரோ தெரியவில்லை.



# தடுமாறும் பிரித்தானிய பிரதமர் ஸ்டார்மர்

வலதுசாரி, இடதுசாரி ஆகிய இருதரப்பிடமும் செல்வாக்கை இழந்து, நாடு முழுவதும் நடைபெற்ற தொடர் தேர்தல்களில் தொழிற்கட்சி தோல்வியைத் தழுவியதை அடுத்து, பிரித்தானியப் பிரதமர் கீர் ஸ்டார்மர் தனது பதவியின் உறுதிப்பாட்டுக்கு முன்னெப்பொழுதும் இல்லாத ஒரு பெரும் சவாலை எதிர் கொண்டுள்ளார். 2016 பிரெக்ஸிட் (Brexit) சர்வஜன வாக்கெடுப்புக்குத் பிறகு, தனது தலைமைத்துவத்தின் மீதான இத்தகைய கடுமையான நம்பிக்கையிழப்பை எதிர்கொள்ளும் ஐந்தாவது அரசாங்கத் தலைவர் ஸ்டார்மர் ஆவார்.

மிட்லாண்ட்ஸ் மற்றும் வடக்கு இங்கிலாந்து உள்ளிட்ட தொழிற்கட்சியின் கோட்டைகளாகக் கருதப்பட்ட பகுதிகளில், அக்கட்சி 1,100 ஆங்கில உள்ளூராட்சி இடங்களை இழந்ததைத் தொடர்ந்து நிலைமை உச்சக் கட்டத்தை எட்டியது. இதுவரை தொழிற்கட்சியின் அல்லது அவர்களின் பிரதான எதிர்க் கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் முக்கிய தளங்களாக இருந்த பல பகுதிகளில், தீவிர வலதுசாரி கட்சியான "ரிஃபார்ம் யு.கே" (Reform UK) குறைந்தது 1,400 இடங்களைக் கைப்பற்றி பெரும் அலையை ஏற்படுத்தியுள்ளது.

சில கணிப்புகளின்படி, அண்மைய தேர்தலில் 26 சதவீதத்துடன் ரிஃபார்ம் கட்சி மிகப் பெரிய வாக்குப் பங்கைப் பெற்றுள்ளது. அதற்கு அடுத்த படியாக பசுமைக் கட்சி (Greens) 18 சதவீதத்தையும் தொழிற்கட்சியும் கன்சர்வேட்டிவ் கட்சியும் தலா 17 சதவீதத்துடன் கிட்டத்தட்ட சமநிலையிலும் உள்ளன.

இந்த தேர்தல் முடிவு, ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீடித்து வந்த இருகட்சி ஆதிக்கத்தின் முடிவை மிகத் தெளிவாக உணர்த்துவதாக அமையக் கூடும். தொழிற்கட்சிக்கு ஏற்பட்டுள்ள இந்த அண்மைய பின்னடைவு ஸ்டார்மரின் பதவிக்காலத்தில் நிகழ்ந்திருப்பது, அவர் பிரதமர் நாற்காலியில் நீடிப்பதற்கு நல்ல அறிகுறியாகத் தெரியவில்லை. குறிப்பாக, அவரது கட்சியின் 403 பாராளுமன்ற உறுப்பினர்களில் கிட்டத்தட்ட 100 பேர் அவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று கோரியுள்ளனர், மேலும் ஐந்துக்கும் குறையாத அமைச்சர்கள் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்துள்ளனர்.

பதவியைக் கைப்பற்றக் காய் நகர்த்துபவர்களில் மான்செஸ்டர் மேயர் ஆண்டி பர்ன்ஹாம், முன்னாள் துணைப் பிரதமர் ஏஞ்சலா ரெய்னர் மற்றும் எரிசக்தி துறை அமைச்சர் எட் மிலிபான்ட் ஆகியோர் அடங்குவர்.

இதில் யார் வெற்றி பெற்றாலும், மற்றும் 2029 ஆம் ஆண்டு வரை நடப்பதற்கு வாய்ப்பில்லாத அடுத்த பொதுத்தேர்தல் வரை டவுனிங் வீதியில் இன்னும் என்னென்ன திருப்பங்கள் அரங்கேறினாலும், பிரதமர் அலுவலகத்தின் இந்த "சுழல் கதவு" (அடிக்கடி மாறும் பிரதமர்கள்) நிகழ்விலிருந்து நாம் துணிச்சலாக ஒரு முடிவுக்கு வரலாம் அதுபிரெக்ஸிட்டின் நீண்ட நிழல் இன்னும் பிரித்தானியாவைத் தொடர்ந்து உலுக்கி வருகிறது என்பதுதான்.

2024 தேர்தலில், பிரெக்ஸிட் வெளியேற்ற ஆதரவுப் பிரச்சாரத்தின் (Leave campaign) முக்கிய ஆதரவாளர்கள்- பிரதானமாக கன்சர்வேட்டிவ் கட்சியிலிருந்து வலதுசாரியான ரிஃபார்ம் கட்சிக்கும், பிரெக்ஸிட் எதிர்ப்புப் பிரச்சாரத்தின் (Remain campaign) ஆதரவாளர்கள், பிரதாமாக தொழிற்கட்சியிலிருந்து இடதுசாரியான பசுமைக் கட்சிக்கும் மாறுவதற்குக் காரணமாக அமைந்ததன் மூலம், பிரெக்ஸிட் தான் பிரித்தானியாவில் பலகட்சி ஜனநாயகத்தின் உதயத்தை உண்மையிலேயே துரிதப்படுத்தியது என்று சிலர் வாதிடுகின்றனர்.

எனவே, லிபரல் ஜனநாயகவாதிகளையும் (Liberal Democrats) சேர்த்துக் கணக்கிட்டால் ஜனநாயகவாதிகளை வாக்களிக்கும் மக்கள் தொகை தற்போது ஐந்து கட்சிகளாகப் பிளவுபட்டுள்ளது. இருப்பினும், இவற்றுக்கு இடையேயான அடிப்படை வேறுபாடு இன்னும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருப்பது குறித்த வாக்காளர்களின் கருத்துக்களுடனேயே தொடர்புடையதாக இருக்கிறது.

உலகெங்கிலும் தீவிர தேசியவாதப் ஜனரஞ்சகவாதம் (nativist populism) பரவி வரும் நிலையில், பிரித்தானிய வாக்காளர்களின் இந்த பிளவு, ரிஃபார்ம் கட்சியின் நைஜல் ஃபாரேஜ் போன்ற குடியேற்ற - எதிர்ப்பு கோட்பாட்டாளர்களுக்குப் பாதகமில்லாத எளிய இலக்காக மாற்றியுள்ளது.

இதற்கிடையில், பிரமர் வாசஸதலத்தின் கதவுகளின் வழியே உள்ளே நுழையும் ஒவ்வொரு புதிய பிரதமர் வேட்பாளரும் பலவீனமான குழுக்களாகப் பிரிந்துள்ள ஓர் ஆதரவுத் தளத்தின் சவாலையே எதிர்கொள்கின்றனர் அதேநேரம், ஒவ்வொரு திருப்பத்திலும் எழும் வான்முட்டும் வாழ்க்கைச் செலவினங்கள் மற்றும் சமூக-பொருளாதாரக் கொந்தளிப்புகள் குறித்த கடினமான கேள்விகளுக்கு அவர்கள் வலுவான பதில்களை வழங்க வேண்டிய கட்டாயத்திலும் உள்ளனர்.

பிரித்தானியா, இப்போது ஆள முடியாத ஒரு நாடாக மாறிவிட்டது போலத் தோன்றுகிறது.

**(தி இந்து ஆசிரிய தலையங்கம், 18 மே,2026)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இன்றைய ராசிபலன்

மே - 20 புதன்கிழமை
பராபவ வருடம் - வைகாசி 06
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சதுர்த்தி

**மேடம்** – துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனதிற்கு இதமான செய்திவரும். வியாபாரத்தில் ரெட்டிப்புலாபம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும்.

**இடபம்** – கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மிதுனம்** – ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக்கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் புதியஅதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

**கடகம்** – கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். விவாதங்களை தவிர்க்க வேண்டும்.

**சிம்மம்** – எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் பாராட்டும் படி நடந்துக் கொள்வீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**கன்னி** – கடந்த கால சுகமான அனுபவங்கள் மனதில் நிழலாடும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட லாபம் அதிகரிக்கும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும்.

**துலாம்** – குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். புதியவர் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புதிய மாற்றம் ஏற்படும்.

**விருட்சிகம்** – சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். பண விஷயத்தில் சாக்கு போக்கு சொல்லி சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும்.

**தனுசு** – மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டாகும். வாகனம் சிறு சிறு தொந்தரவு தரும். புது சலுகைகள் கிடைக்கும். நன்மை கிட்டும்.

**மகரம்** – குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**கும்பம்** – மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவீர்கள். புதிய அதிகாரி வழி வந்தவர்கள் புதுமை படைக்கும் நாள்.

**மீனம்** – திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

# வவுனியாவில் தனிநபர்களினால் ஆக்கிரமிக்கப்படும் ஆலங்குளம்

### கிராம மக்கள் விசனம்



வவுனியா, மே. 20

வவுனியா, ஆசிக்குளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமார் 50 வருடங்களுக்கும் மேற்பட்ட பழமை வாய்ந்த ஆலங்குளம் தனிநபர்களால், ஆக்கிரமிக்கப்பட்டு அழிக்கப்பட்டு வருவதாக கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக ஆலங்குளம் பகுதியின் வரலாற்றை முற்றிலும் அழித்து அக்குளத்தை ஆக்கிரமிக்கும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக ஆலங்குளத்தை புனரமைப்பதற்காக கடந்த காலங்களில் நிதி ஒதுக்கப்பட்டதாக கூறப்பட்டபோதிலும், குறித்த அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாது பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்விடயத்தில் அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு சட்ட நடவடிக்கை எடுக்காவிட்டால், இக்குளங்களை நம்பி விவசாயம் செய்யும் விவசாயிகளும், கிராம மக்களும் எதிர்காலத்தில் மிக மோசமான வாழ்வாதாரப் பாதிப்புகளைச் சந்திக்க நேரிடும் எனவும் மக்கள் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபனிடம் கேட்ட போது-

இது தொடர்பாக தமக்கு கிராம மக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதாகவும், இதனைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

# பாடசாலை அதிபரை மாற்றவேண்டாம்!

### குடத்தனை வடக்கு மக்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், மே. 20

பாடசாலை அதிபரை மாற்றவேண்டாம் என்று கோரி குடத்தனை வடக்கு மக்கள் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை கரையூர் அ. மி. த. க. பாடசாலையில் கடமை நிறைவேற்று அதிபராக பணியாற்றிக் கொண்டிருந்தவரை சில நாள்களுக்கு முன்னர் கல்வித் திணைக்களம் தற்காலிக இடமாற்றம் செய்திருந்தது. இந் நிலையில் தற்காலிக இடமாற்றம் செய்யப்பட்டிருந்த அதிபரை மீண்டும் தமது பாடசாலைக்கு நியமிக்குமாறு கோரி நேற்றுக் காலை 7. 45 மணியளவில் பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் முடிவில் கல்விப் பணிப்பாளருக்கு வழங்குவதற்கு மகஜர் ஒன்றும் பதில் அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதில் சுமார் 75 இற்கும் மேற்பட்ட பெற்றோர்கள் கிராம மக்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, குறித்த அதிபர் மீது அதிருப்தியுற்ற சில பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் குறித்த அதிபரை மாற்றம் வேண்டும் என்று பல வருடங்களாக உரிய கல்வி அதிகாரிகளிடம் கோரிக்கைகளை முன் வைத்திருந்தனர். இதன் அடிப்படையிலேயே குறித்த கடமை நிறைவேற்று அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். (அ)

# விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் மகோற்சவ பெருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே. 20

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவ பெருவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது .

இதற்கமைய 27 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 28 ஆம் திகதி 7இரவு மணிக்கு சப்பறத் திருவிழாவும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்திருவிழாவும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இரவு 7 மணிக்கு கொடி இறக்கமும் 31 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகமும் அன்று மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும் 1 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு வைரவர் பொங்கலும் இடம்பெற்று மகோற்சவம் நிறைவு பெறும்.

ஆலய பிரதம குரு பண்டிதர் கலாநிதி சிவசிறீ து.கு. ஜெகதீஸ்வரக்குருக்கள், மகோற்சவகுரு “கிரியாரத்ன” சிவசிறீ ராம் சண்முகானந்தகுருக்கள், ஆலய குரு பிரம்மசிறீ ராஜ்குருக்கள் யதீஸ்வர சர்மா ஆகியோர் கிரியைகளை நடத்துவர். விழாவுக்கான ஆசியுரையை விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆதீனம், மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ மாவை து. ஷ.ரத்தினசபாபதிக்குருக்கள் வழங்கவுள்ளார். (அ)

# நீர்வேலியில் சுக்கிர வாரச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே. 20

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 53 ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் சிறப்புச்சொற்பொழிவினை சைவப்புலவர், திருவாசகப்பிரியன் ச.முகுந்தன் “ இந்திரனருச்சனைப் படலம் ” என்னும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவு ஆற்றுவார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### மத்திய கிழக்கு போரினால் இலங்கைக்குப் பாதிப்பு:

# முதல் நான்கு மாதங்களிலேயே எரிபொருள்களின் இறக்குமதிச் செலவு 1 பில். டொலரை தாண்டியது!

கொழும்பு, மே. 20

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தீவிரமடைந்துள்ள போர்ச் சூழல், இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. நடப்பு 2026 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்குள்ளேயே, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் இறக்குமதிச் செலவு மாத்திரம் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடந்துள்ளதாக உத்தியோகபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த முழு 2025 ஆம் ஆண்டுக்குமே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த எரிபொருள் இறக்குமதிச் செலவு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மட்டுமே காணப்பட்ட நிலையில், இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலேயே இந்த அளவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுவின் கூட்டத்தின் போது இந்த அதிர்ச்சித் தகவல் வெளிவந்துள்ளது.

மத்திய கிழக்கு நெருக்கடி மற்றும் தற்போதைய உலகளாவிய பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில், இலங்கையின் எதிர்காலப் பொருளாதார நிலைவரம் எவ்வாறு அமையும் என எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இந்த விவரங்களை வெளியிட்டார்.

"தற்போது குறிப்பிட்டுள்ள 1 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதிச் செலவு மட்டுமே ஆகும். ஏனைய இரண்டு தனியார் விநியோகஸ்தர்களின் இறக்குமதிச் செலவுகள் இதனுள் உள்ளடக்கப்படவில்லை. அவையும் சேர்க்கப்பட்டால் இந்தத் தொகை இன்னும் அதிகரிக்கும்," என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

# எரிபொருள் கியூ.ஆர். முறை தொடரும்!

கொழும்பு, மே. 20

எரிபொருள் விநியோகத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கியூ.ஆர். குறியீட்டு முறைமை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் என நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் எரிபொருள் நுகர்வை இயன்றவரை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த முறைமை தொடரப்படுவதாக குறிப்பிட்டார்.



எரிபொருள் விநியோகத்தை ஒழுங்குபடுத்தவும், தேவையற்ற பயன்பாட்டை குறைக்கவும் கியூ.ஆர். முறைமை உதவிகரமாக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# ஆயுதத்தால் தாக்கி ஒருவர் படுகொலை!

கொழும்பு, மே. 20

எஹலியகொட, வலவிட்டவத்த பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள்களில் வந்த குழுவினர் இக் கொலையை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


கெட்டஹெத்த பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதான நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# லண்டன் பாராளுமன்றம் முன்பாக நீதி கோரி தமிழர்கள் ஆர்ப்பாட்டம்!

### ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு




லண்டன், மே. 20

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசு மேற்கொண்டுவரும் படுகொலைகள் மற்றும் கடத்தப்பட்டு காணாமல்போனவர்களுக்கு நீதி வேண்டியும், நில அபகரிப்புக்கு எதிராகவும் நேற்று முன்தினம் லண்டன் பாராளுமன்றம் முன்பாக ஒன்று கூடிய புலம்பெயர் ஈழ தமிழர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

புலம்பெயர் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டத்தில் இனவழிப்பு அரசாங்கத்துக்கு தண்டனை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டது.

இதில் பெருந்திரளான புலம்பெயர் தமிழர்கள் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

(அ)

# வெள்ளத்துக்கு பின் நீர்வழி நோய்கள் பரவும் அபாயம்!

கொழும்பு, மே. 20

மழையுடனான காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள சிறியளவிலான வெள்ளப்பெருக்குகளுக்குப் பின்னர், நீர் மூலம் பரவும் நோய்கள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

டெங்கு, எலிக்காய்ச்சல், மஞ்சள் காமாலை மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் அடுத்த இரண்டு வாரங்களில் அதிகரிக்கக்கூடும் என சிரேஷ்ட ஆலோசகர் மருத்துவ நிபுணர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

வெள்ளநீர் மற்றும் மாசடைந்த குடிதண்ணீர் மூலம் நோய்கள் பரவக்கூடும் என்பதால், கொதிக்கவைத்து ஆறவைக்கப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்பட்ட நீரை மட்டுமே பருகவேண்டும் என்றும், சேற்று நீரில் நடப்பதைத் தவிர்க்கவேண்டும் என்றும் பொதுமக்களிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

# புதையல் தோண்டிய 7பேர் கைது!

கொழும்பு, மே. 20

யாப்பஹுவ பகுதியில் சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய எழுவரை கைது செய்துள்ளதாக மஹவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு மஹவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே, இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

மகுல்பொத்த, மஹவ, ரிதீபெந்திஎல்ல மற்றும் பலல்ல ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சந்தேக நபர்கள் 17 முதல் 51 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு கோடீஸ்வரன் எம்.பி. திடீரென விஜயம்!


## அங்குள்ள வசதிகள் பற்றி ஆராய்ந்தார்

அம்பாறை, மே. 20

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.வி. கோடீஸ்வரன், கல்முனை ஆதார வைத்தியசாலைக்கு நேற்று முன் தினம் திங்கள்கிழமை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

அவரை வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் குண. சுகுணன் மற்றும் வைத்தியசாலை குழுவினர் வரவேற்று கலந்துரையாடினர்.

பின்னர், வெளிநோயாளர் பிரிவு, நோயாளிகள் விடுதிகள், அவசர சிகிச்சை பிரிவு, உயர் கவனிப்பு பிரிவு , சமையலறை உள்ளிட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு அங்குள்ள சேவைகள் மற்றும் நோயாளர்களின் நிலைமைகள் தொடர்பில்



ஆராய்ந்தார்.

இவ்விஜயத்தின்போது, பணிப்பாளர் சுகுணன் வைத்தியசாலையில் சமகாலத்தில் முன்னெடுக்கப்படும் சுகாதார சேவைகள், நவீன தொழில்நுட்ப வசதிகள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து பூரண விளக்கமளித்தார்.

நோயாளர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுடன் கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர், மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்க தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

(அ)

குருக்கள்மடம் மனிதப் புதைகுழி;

# ஸ்கானிங் தொடர்பான இறுதி அறிக்கை 22 ஆம் திகதிக்கு முன் நீதிமன்றத்துக்கு!

மட்டக்களப்பு, மே. 20

குருக்கள்மடம் மனிதப்புதைகுழி ஸ்கானிங் நடவடிக்கையின் இறுதி அறிக்கை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது.

1990 ஆம் ஆண்டில் புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணம் செய்த முஸ்லிம்கள், ஆயுதத்தாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள்மடத்தில் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு விசாணை நேற்று முன் தினம் திங்கள்கிழமை களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டிருந்தது.

அந்த வழக்கில் தொடர்புடையவர்கள் இதன்போது சமூகமளித்திருந்தனர். குருக்கள்மடம் மனித புதைக்குழி தொடர்பான வழக்கில் கடந்த 14 ஆம் திகதி மன்றினால் ஆக்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக கடந்த 15ஆம், 16ஆம்,17 ஆம் திகதிகளிலே பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான நிபுணத்துவக் குழுவினால் குறித்த மனித புதைக்குழி அமையப்பெற்றுள்ளதாக நம்பப்படுகின்ற அந்த இடத்தில் ஸ்கானிங் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அந்த அடிப்படையில் குறித்த அந்த ஸ்கானிங் நடவடிக்கைகளின் இறுதி அறிக்கை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். அதன் பிற்பாடு குறித்த வழக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி வழக்கு தொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்காக திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்படவுள்ளது என கூறப்பட்டது. (அ)

# ரூ.14 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலைக் கட்டடம் ஆளுனரால் கையளிப்பு



திருமலை, மே. 20

2025 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபாய் 14 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பதவி சிறீபுர, பதவி ஜயந்தி வித்தியாலயத்தின் புதிய இருமாடிக் கட்டடமும் ஆசிரியர் விடுதியும் திறக்கப்பட்டு பாடசாலை பயன்பாட்டுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, 06 வகுப்பறைகள் கொண்ட இருமாடிக் கட்டடத்திற்காக ரூபாய் 10.5 மில்லியனும், புதிய ஆசிரியர் விடுதிக்காக ரூபாய் 3.5 மில்லியனும் ஒதுக்கப்பட்டு நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பாடசாலைக்கு கையளிக்கப்பட்டது.

இன்னொரு புதிய ஆசிரியர் விடுதியின் நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன.

(அ)

# பொலிஸ் பிடியில் தப்பிய பின்னர் சுடப்பட்டு பிடிபட்ட சந்தேக நபர் தொடர்பில் விசாரணை

அம்பாறை, மே. 20

பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பிய பின்னர் சுடப்பட்டு கைதான சந்தேக நபர் தொடர்பில் அம்பாறை தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அம்பாறை பொது வைத்தியசாலையில் வைத்து நேற்று முன் தினம் திங்கள்கிழமை அதிகாலை பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பிய சந்தேக நபர் பின்னர் பொலிஸாரினால் சுடப்பட்டு கைது செய்யப்பட்டு அம்பாறை பொது வைத்தியசாலையில் கடும் பாதுகாப்பில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சந்தேக நபர் அம்பாறை மாவட்டம் புறநகர் பகுதியான கொட்டவேஹெரா கிராமத்தில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபட்ட நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அம்பாறை முகாம் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக அம்பாறை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அம்பாறை தலைமையக பொலிஸார் சந்தேக நபரை நேற்று முன் தினம் திங்கள்கிழமை அம்பாறை வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக மருத்துவரிடம் அழைத்துச் சென்ற நிலையில் குறித்த சந்தேக நபர் பொலிஸாரின் பிடியில் இருந்து தப்பிச் சென்றிருந்தார்.

இந்நிலையில் தப்பி சென்ற குறித்த சந்தேக நபரை பின் தொடர்ந்த பொலிஸார் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்து கைது செய்தனர்.

இதன்போது பொலிஸாரின் கையில் இருந்த துப்பாக்கியைப் பறிக்க முயன்ற சந்தேக நபர் பொலிஸாரினால் சுடப்பட்டார்.

இதன் போது சந்தேக நபரின் தொடைப் பகுதியில் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொலிஸார் சந்தேக நபரை கைது செய்த பின்னர் அம்பாறை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

இந்த துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(அ)

# முத்துநகர் சோலர் திட்டத்தால் விவசாயிகள், மீனவர் பாதிப்பு

### இம்ரான் மஹ்ரூப் எம்.பி. கவலை

திருமலை, மே. 20

திருகோணமலை முத்துநகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சோலார் பவர் திட்டத்தால் நூற்றுக்கணக்கான பொது மக்களின் விவசாயக் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டு வருவதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்துள்ளார்.

துறைமுக அதிகார சபை என்ற பெயரில் பல தலைமுறைகளாக விவசாயத்தை நம்பி வாழ்ந்து வந்த மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் அவர்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தங்களது பாரம்பரிய காணிகளை பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் மக்கள் தொடர்ச்சியாக கவனயீர்ப்பு போராட்டங்களிலும் அதிகாரிகளுடனான சந்திப்புகளிலும் ஈடுபட்டு வந்தபோதிலும், இதுவரை நிரந்தரமான தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மனைப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக மட்டக்களப்பில் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி

மட்டக்களப்பு, மே. 20

மனைப் பொருளாதாரத்தை உயர்த்தும் முகமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு வீட்டிலிருக்கின்ற யுவதிகளுக்கு பல துறைகள் சார்ந்து இலவசமாக பயிற்சிகள் வழங்கப்பட்டு வரப்படுகின்றன.


அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கின்ற யுவதிகளுக்கு வீடுகளிலிருந்தவாறே அதிகளவு வாருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அம்மன் மகளிர் இல்ல பவுண்டேசன் மற்றும் பொண்டானா பவுண்டேசன் ஆகிய அமைப்புக்கள் இணைந்து யுவதிகளுக்கு வருமானமீட்டும் தொழில்களுக்குரிய பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

மட்டக்களப்பு கூழாவடி கிராமத்தில் அழகுக்கலைப் பயிற்சி, புதூர் கிராமத்தில் ஆரிவேர்க் பயிற்சி, மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் புறக்கிராமங்களான தம்மானம்வெளி கிராமத்தில் தென்னை ஓலையில் கைப்பணிப் பொருள் உற்பத்தி பயிற்சி, உன்னிச்சைக் கிராமத்தில் கேக் மற்றும் இனிப்புப் பண்டங்கள் தயாரிப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலவசமாக நடத்தப்படும் நான்கு மாதங்கள் கொண்ட இப்பயிற்சி நெறிமுடிவில் அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும், பின்னர் இதில் பயிற்சிகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் சுமார் 80 யுவதிகள் தத்தமது வீடுகளிலிருந்தவாறே சுயதொழில்களை ஈட்டுவதற்கு இது ஒரு பெரும் வாய்ப்பாக அமையும் என அம்மன் மகளில் இல்ல பவுண்டேசனின் பணிப்பாளர் வி.வாமதேவன் தெரிவித்தார்.

(அ)

# சாய்ந்தமருதில் "அகன்று செல்" போதைக்கு எதிரான விழிப்புணர்வு



அம்பாறை, மே. 20

இலங்கையில் போதைப் பொருள் ஒழிப்பை ஒரு தேசிய இயக்கமாக முன்னெடுக்கும் வகையில், "அகன்று செல்" எனும் தொனிப்பொருளில் விசேட விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்று முன் தினம் திங்கள் கிழமை சாய்ந்தமருதில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலுக்கு முன்னால் உள்ள பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டி.எஸ். இந்திக தலைமை தாங்கி, ஓட்டோக்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை ஒட்டி இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

போதைப்பொருள் தொடர்பான முறைப்பாடுகளை வழங்குவதற்காக பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 1818 என்ற இலக்கத்தை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

ஊர் முழுவதும் பயணிக்கும் ஓட்டோக்கள் மூலம் இந்தச் செய்தியை ஒவ்வொரு கிராமத்திற்கும் கொண்டு செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## எந்தவொரு இனவாத...

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க,

அண்மைய வரலாற்றில் தாய்நாட்டை விடுவிப்பதற்காகத் தோள் கொடுத்த நமது படையினர்களுக்கு உயரிய மரியாதையையும் கௌரவத்தையும் செலுத்துவதற்காகவே நாம் அனைவரும் இங்கு ஒன்று கூடியுள்ளோம்.

நாட்டுக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்த படையினர்களை இந்த படையினர் நினைவுத் தூபிக்கு முன்னால் நினைவு கூருவதற்கும், அவர்கள் எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கும், யுத்தம் முடிவுக்கு வந்து 17 ஆண்டுகள் நிறைவடையும் இன்றைய நாளில் நாம் இந்த நிகழ்வை நடத்துகிறோம்.

சுதந்திர தேசத்தின் கௌரவத்திற்காகத் தமது உயிர்களையும், இரத்தத்தையும், கண்ணீரையும் விலையாகக் கொடுத்த அனைத்து படையினர்களையும் இந்தத் தருணத்தில் மிகுந்த மரியாதையுடன் நினைவு கூருகின்றேன். தமக்காக அல்லாமல் பிறருக்காகவும் நாட்டுக காகவும் உயிர்த்தியாகம் செய்து அவர்கள் ஆற்றிய சேவைக்கு இந்தத் தேசத்தின் கௌரவத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த வருடம் நான் குறிப்பிட்டதைப் போல, நாம் ஒரு திருப்பு முனையில் நின்றுகொண்டிருக்கிறோம். அறியாமையை விட அறிவைத் தேட வேண்டும். பிளவுகளை விட ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டும். தேக்கநிலையை விட முற்போக்கை நோக்கி நகர வேண்டும்.

நான் அன்று கூறியது போலவே, இந்தத் திருப்புமுனையில் நமக்கு முன்னால் இரண்டு பாதைகள் உள்ளன. ஒரு பாதை, பரஸ்பரம் வெறுப்பையும் குரோதத்தையும் விதைக்கும் அழிவுகரமான பழைய பாதை. அடுத்த பாதை, இந்த நாட்டை ஒற்றுமை, அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்தை நோக்கி இட்டுச் சென்று மக்களின் வாழ்க்கையைப் பாதுகாக்கும் பாதை. மிகவும் கடினமான தருணத்திலும் நாம் தேர்ந்தெடுப்பது இரண்டாவதாகக் குறிப்பிட்ட பாதையைத்தான் என்று நான் கருதுகிறேன். அந்தப் பாதையில் அச்சமின்றி, உறுதியுடன் பயணிப்பேன் என்று உங்கள் முன்னிலையில் உறுதியாக கூறுகிறேன்.

இந்த மாற்றத்திற்காக வரலாற்றில் முதல் முறையாக மக்களுக்குப் பொறுப்புக்கூறுகின்ற, மக்களுக்கான ஒரு அரசாங்கம் உருவாகியுள்ளது. அந்த அரசாங்கம் சொல்லின் முழுமையான அர்த்தத்திலேயே மக்களுடையதாகும்.

இன்று நாம் முன்னோக்கி கொண்டு செல்வது நமக்கிடையில் உள்ள பிரிக்க முடியாத மனிதாபிமான ஆன்மாவாகும். சர்வதேச அரங்கில் இலங்கையின் நற்பெயரை நாம் மேம்படுத்தி வருகிறோம். நமது நாட்டை சட்டம் மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்தை மதிக்கின்ற ஒரு நாடாக மாற்றியமைத்துள்ளோம்.

இந்த நாட்டை காப்பாற்றுவதற்காக தமது உயிரைத் தியாகம் செய்து அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவரினதும் பிரார்த்தனைகளை நமது தோள்களில் சுமந்து கொண்டு, ஒரு முன்மாதிரியான நாட்டை கட்டியெழுப்பும் உறுதியான பயணத்தில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

போரினால் உலகைத் துண்டு துண்டாக உடைத்தெறிய முடியும். ஆனால், அமைதியால் மட்டுமே உலகை ஒன்றிணைக்க முடியும். சடலங்களின் குவியல்களின் மேல் ஒரு மனித சமுதாயத்தை உருவாக்க முடியாது. இரத்த ஆறுகளுக்கு மத்தியில் அமைதியை கட்டியெழுப்ப முடியாது.

வெடிக்கும் குண்டுகள் மற்றும் தோட்டாக்கள் மூலம் அடுத்த தலைமுறைக்கு நிம்மதியான ஒரு நாட்டையோ அல்லது உலகையோ விட்டுச் செல்ல முடியாது. போர் என்பது ஒரு பேரவலம். எனவே, நாம் போரின் கதையை வரலாற்றிடம் ஒப்படைத்துவிட்டு, அமைதிக்கான நிலையான வழிபாட்டை தற்போதைய காலத்துடன் இணைத்துக் கொண்டுள்ளோம்.

எமது நாட்டின் முப்படைகள் உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவினர் தங்களது கடமையை நிறைவேற்றினர். அவர்கள் பிரிவினைவாதத்திற்கு எதிராகவே யுத்தம் செய்தனர். இந்த தாய்நாடு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய நாம் அனைவரும் எந்தவொரு இடத்திலும் வாழ்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒரு தாய்நாடாகும்.

அந்த தாய்நாட்டை பிரித்தெடுப்பதற்கு எதிராகவே நீங்கள் போராடினீர்கள். அவர்கள் எந்தவொரு இனத்திற்கும் எதிராக யுத்தம் செய்யவில்லை. யுத்தத்தின் கொடூரமான விளைவுகளை அனைத்து இனத்தவர்களும் அனுபவிக்க நேரிட்டது. ஒரே நாட்டின் இளைஞர்கள் இந்த யுத்தத்தின் காரணமாக எமக்கு இல்லமல் போனார்கள்.

சுயநலமிக்க, அதிகார பேராசை கொண்ட அரசியல்வாதிகள் மற்றும் தீவிரவாத நிகழ்ச்சி நிரல்களின் காரணமாக ஒரே நாட்டின் மனிதர்கள் இரண்டாகப் பிளவுபட்டனர்.

அரசியல் அநாகரிகமானது மனிதநேயத்தை ஒரு கால்பந்தாக மாற்றியது. இன்றும் சிலர் யுத்தம் நல்லதா, கெட்டதா என்று வாதிடுகின்றனர். நான் யுத்தம் நல்லதா, கெட்டதா என்று தீர்ப்பு வழங்கத் தயாராக இல்லை. ஆனால், மீண்டும் ஒருபோதும் யுத்தம் ஒன்று ஏற்படாதவாறு நான் பார்த்துக்கொள்வேன்-என்றார்.(அ)

## யுத்தம் பாதித்த...

நாட்டு பிரச்னைகளை எமது நாட்டுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மூன்று தசாப்த கால கொடூரம் நிறைந்த யுத்தத்தினால் பாதிப்புகளுக்கு ஆளான மக்களை, இராணுவ வெற்றியின் மூலம் மீட்டெடுத்த சுதந்திர நாடொன்று நம்மிடம் உள்ளது. சிறப்பு மிக்க இந்நாளில், இந்த யுத்த வெற்றிக்கு அரசியல் ரீதியாக தலைமைத்துவத்தைப் பெற்றுத் தந்த மகிந்த ராஜபக்ஷவுக்கும், இராணுவத் தளபதியாகத் தலைமை தாங்கிய ஜெனரல் சரத் பொன்சேகா உட்பட, முப்படைகளையும் சேர்ந்த வீரர்கள், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்பை துறையினர்களுக்கும் எனது விசேட மரியாதையைச் செலுத்திக் கொள்கிறேன்.

தங்கள் குடும்பங்களை இரண்டாம் இடத்திலும், நாட்டை முதல் இடத்திலும் வைத்து, நாட்டைக் காப்பாற்றுவதற்காகத் தங்கள் உயிர்களையும், உடல் பாகங்களையும், இரத்தத்தையும் தியாகம் செய்த வீரமிக்க முப்படை வீரர்களுக்கு மரியாதையுடன் அஞ்சலி செலுத்திக் கொள்கிறேன்.

யுத்தத்தில் பெற்றோரை இழந்த பிள்ளைகள் இப்போது வளர்ந்தவர்களாகி இளைஞர்களாக இருப்பர். என்றாலும் அன்று ஏற்பட்ட வேதனைகள், துன்பங்களை நாங்கள் அறிவோம். பயங்கரவாத யுத்தத்தினாலேயே நானும் எனது தந்தையை இழந்தேன். இதனால் எனக்கும் அந்த வேதனை புரியும். இராணுவ குடும்பங்கள் உள்ளிட்ட பாதிக்கப்பட்டவர்களின் வேதனைனகளை அறிவோம்.

இவ்வேளையில் இராணுவ வீரர்கள் என்ற வசனத்தை நாங்கள் பயன்படுத்த தயங்கக்கூடாது. அத்துடன் இனியும் அதுபோன்ற ஒரு யுத்தம் ஏற்பட்டு விடக்கூடாது. அவ்வாறு ஏற்படாத வகையில் நாங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மீளக்கட்டியெழுப்புதல் செயற்பாடுகள் மூலமும், சகோதாரத்துவம், நல்லிணக்கம் சூழலை உருவாக்கி நாங்கள் எமது நாட்டுக்குள் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்னைகளை நாங்கள் தீர்த்துக்கொள்ள வேண்டும். உண்மையிலேயே இந்நாட்டின் ஆள்புல ஒருமைப்பாடு போன்ற பிரச்னைகள் இந்த இனங்கள் மதங்கள் இடையே சகோதரத்துவம் நல்லிணக்கம் ஏற்படுவதன் மூலம் மட்டுமே ஏற்படும்.

இதன் பிரகாரம், யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வுகளை எமது நாட்டுக்குள்ளேயே வழங்கவேண்டும். எப்போதும் வருடாந்தம் ஜெனீவாவுக்கு சென்று கதைப்பது நிறுத்தப்படும் வகையில் ஒருமைப்பாடு, ஆட்புல எல்லை, இறைமை மற்றும் அரசியல் சுதந்திரம் பாதுகாக்கப்படும் வகையில் நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் யோசனையை முன்வைக்கின்றேன்.

அவ்வாறே, படை வீரர்களின் குடும்பங்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய உரிய இடத்தை ரணவிரு சேவா அதிகார சபை ஊடாக மாத்திரம் பெற்றுக் கொடுக்க முடியாது என்பதால், அமெரிக்காவைப் போன்று பிரத்தியகமான திணைக்களமொன்றை தாபித்து, படை வீரர்களின் நலன்புரித் திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்-என்றார்.

## மகிந்தவுக்கு...

அமைச்சர் உபாலி பன்னிலகே வெளியிட்டதாகக் கூறப்படும் கருத்தையும் மனோஜ் கமகே இதன்போது மறுத்துள்ளார்.

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் நடத்தப்படும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கான எந்தவொரு அழைப்பிதழும் முன்னாள் ஜனாதிபதிக்கு இதுவரை கிடைக்கவில்லை" என சட்டத்தரணி மனோஜ் கமகே குறிப்பிட்டார்.

அத்துடன், பொதுமக்களை தவறாக வழிநடத்தவேண்டாம் என அமைச்சர் உபாலி பன்னிலகேவிடம் அவர் கேட்டுக்கொண்டார். (அ)

## பாதிக்கப்பட்ட...

நினைவுகளைக் கௌரவிப்பதற்காகவும், தாங்கள் அனுபவித்த சொல்லொணாத் துயரங்களை வெளிப்படுத்துவதற்காகவும், ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான தமிழ் உயிர் பிழைத்தவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் முள்ளிவாய்க்காலில் ஒன்றுகூடுகின்றனர். அந்தவகையில் நேற்று முன் தினம் அங்கு நினைவேந்தல்கள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைகளின் மூலம் ஆவணப்படுத்தப்பட்ட, மோதலின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் குறித்த நம்பகமான குற்றச்சாட்டுகளுக்கு உண்மை, நீதி மற்றும் இழப்பீடு வழங்குவதற்கான அவசரத் தேவையை இந்த நினைவேந்தல் மீண்டும் அடிக்கோடிட்டுக் காட்டுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

உள்நாட்டு வழிமுறைகள் மூலம் முறையான, நடுநிலையான மற்றும் நம்பகமான விசாரணைகளை உறுதி செய்வதாக உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பலமுறை உறுதியளிக்கப்பட்ட போதிலும், தற்போதைய நிர்வாகம் உள்ளிட்ட அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இந்த கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறிவிட்டன என அந்த சபை குற்றம் சாட்டியுள்ளது.

இவ்வாறாக ஆழமாக வேரூன்றியுள்ள "தண்டனையிலிருந்து தப்பும் கலாசாரம்" நீதி, நல்லிணக்கம் மற்றும் நிலையான அமைதிக்கான வாய்ப்புகளைப் பலவீனப்படுத்துகிறது. அத்துடன், சர்வதேச சட்டத்தின் கீழ் இலங்கைக்கு உள்ள பொறுப்புகளை நிலைநிறுத்துவதற்கு, புதிய மற்றும் உறுதியான நடவடிக்கைகள் அவசரமாக எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் இது உணர்த்துகிறது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின்போது, தங்களது நீண்ட கால குறைகளுக்கான தீர்வுகள் மற்றும் கடந்த கால மீறல்களுக்கான பொறுப்புக்கூறல் ஆகியவை உறுதி செய்யப்பட்டால் மட்டுமே, அரசாங்கத்துடனான அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகள் சாத்தியமாகும் என்பதைத் தமிழ் சமூகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நீதிக்காக அரும்பாடுபட்டுப் போராடி வரும் தமிழ் சமூகத்தின் இந்த முயற்சிக்கு, " மன்னிப்புச் சபை" என்றும் துணையாக நிற்கும் என அதன் உத்தியோகபூர்வ அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பயங்கரவாதத்துக்கு...

சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன நேற்றுக் காலை பாராளுமன்ற அமர்வு ஆரம்பமானபோது உத்தியோகபூர்வமாகச் சபைக்கு அறிவித்தார்.

இதேவேளை, இலங்கை அரசியலமைப்பின் 121 (1) ஆம் பிரிவின் கீழ், இந்தச் சட்டமூலத்தின் சில பிரிவுகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் சவால் விடுத்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

அந்த மனுக்கள் மீதான பரிசீலனைகளைத் தொடர்ந்தே உயர் நீதிமன்றம் இந்த முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

இது குறித்து சபாநாயகர் பாராளுமன்றத்தில் மேலும் விளக்குகையில்-

"பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுக்கும் உடன்படிக்கை (திருத்த) சட்டமூலமானது ஒட்டுமொத்தமாகவும், அதேபோன்று அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தனித்தனி விதிகளும் இலங்கை அரசியலமைப்பின் எந்தவொரு பிரிவுக்கும் முரணாக அமையவில்லை என உயர் நீதிமன்றம் திட்டவட்டமாக முடிவு செய்துள்ளது.

எனவே, இந்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு எவ்வித அரசியலமைப்புத் தடைகளும் இல்லை என்பதை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது." எனத் தெரிவித்தார்.

இதற்கமைய, இந்த புதிய சட்டமூலமானது பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கான வழிவகை ஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## இந்தியா - இலங்கை...

தலைப்பிலான இந்த ஆய்வில், வலுவான தரைவழித் தொடர்பானது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், சுற்றுலா மற்றும் பிராந்திய வளர்ச்சியை முற்றிலும் மாற்றியமைக்கும் என வாதிடப்பட்டுள்ளது.

முன்னதாக கொழும்பில் நடைபெற்ற உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தலைமைத்துவ மாநாட்டில் உரையாற்றிய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இரு நாடுகளுக்கும் இடையே நேரடி தரைவழித் தொடர்பு இல்லாததை ஒரு "முரண்பாடு" எனக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தத் திட்டத்தின் பின்னாலுள்ள பொறியியல் மற்றும் வணிக ரீதியான காரணங்கள் மிகவும் அழுத்தமானவை எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதன் மூலமே இந்த விவகாரம் மீண்டும் பேசுபொருளாக மாறியுள்ளது. இந்தியாவின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையில் அமைக்கப்படும் நிலையான சாலை மற்றும் தொடருந்து இணைப்பு, பயண மற்றும் போக்குவரத்து நேரத்தை கணிசமாகக் குறைக்கும்.

தற்போது கப்பல் போக்குவரத்து செயல்முறைகள் மற்றும் [illegible] கொண்டு செல்ல 40 முதல் 122 மணித்தியாலங்கள் வரை ஆகிறது.

ஆனால், முன்மொழியப்பட்டுள்ள தரைவழிப் பாதை மூலம் இந்தச் சரக்கு போக்குவரத்தை அதிகபட்சமாக 9 மணித்தியாலங்களுக்குள் நிறைவு செய்ய முடியும்.

இந்தியாவின் கேரளாவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள விழிஞ்சம் துறைமுகம் உள்ளிட்ட பிராந்தியப் போட்டிகளுக்கு மத்தியில், இந்த தரைப்பாலம் கொழும்பு துறைமுகத்தின் போட்டித்திறனை மேலும் உயர்த்தும். நேரடி தரைவழித் தொடர்பானது இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களின் பொருளாதார நடவடிக்கைகளை மாற்றியமைக்கும்.

2034ஆம் ஆண்டளவில் ஒரு டிரில்லியன் டொலர் பொருளாதாரமாக உருவெடுக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ள தென்னிந்தியாவின் குறிப்பாக தமிழ்நாட்டின் பொருளாதாரத்துடன் இந்த மாகாணங்களின் வணிகங்கள் நேரடியாக இணைவதற்கும், பிராந்திய தொழில் வளர்ச்சிக்கும் தரைப்பாலம் வழிவகுக்கும்.

குறைந்த செலவிலான தரைவழி அணுகல் காரணமாக தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இது பின்தங்கிய பிராந்தியங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும்.

இந்தத் திட்டத்தில் உள்ள சாதகமான அம்சங்களை பட்டியலிட்டுள்ள மாற்றுக்கொள்கைக்கான அறிக்கை, சில முக்கிய எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளது.

பாக்கு நீரிணை மற்றும் ஆதாம் பாலம் (ராமர் பாலம்) ஆகியவற்றைச் சுற்றியுள்ள பகுதிகள் மிகவும் உணர்திறன் வாய்ந்த கடல்சார் சுற்றுச்சூழல் அமைப்புகளையும் வனவிலங்கு வாழ்விடங்களையும் கொண்டுள்ளன.

எனவே, இந்தத் திட்டத்தை முன்னோக்கி நகர்த்துவதற்கு முன்னர் விரிவான சூழலியல் தாக்க மதிப்பீடு செய்யப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## விமலுக்கு...

பணிகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட குழுவினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று தேசிய யுத்த வீரர்கள் நினைவு தினத்தை முன்னிட்டு, ஜனாதிபதி தலைமையில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு பாராளுமன்ற விளையாட்டு மைதானத்தின் யுத்த வீரர்கள் நினைவிடத்துக்கு அருகில் நடத்தப்பட்டது. அதற்கான ஒத்திகைப் பணிகள் நேற்று முன் தினம் இடம்பெற்றன.

இந்த ஒத்திகைப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளையில், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட சுமார் 35 பேரடங்கிய குழுவினர், ஒத்திகைப் பணிகளுக்கும் அதிகாரிகளின் உத்தியோகபூர்வ கடமைகளுக்கும் இடையூறு ஏற்படும் வகையில் யுத்த வீரர்கள் நினைவிட வளாகத்துக்குள் அனுமதியின்றி நுழைவதற்கு முயற்சித்துள்ளதாக பொலிஸார் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட குழுவினருக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (அ)

## மின் கட்டணங்களில்...

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவது எரிபொருள் விலையில் பாரிய தாக்கத்தை செலுத்துகிறது. எனினும் அதனை அடிப்படையாகக் கொண்டு மின் கட்டணங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படமாட்டாது. செப்ரெம்பர் வரை மின் கட்டணத்தில் திருத்தங்கள் இல்லை-என்றார். (அ)

## இரத்தப் புற்று...

குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது இரத்தப் புற்றுநோயுடன் வாழும் ஒட்டுமொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 15,000 முதல் 18,000 வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் மருத்துவர் புத்திக சோமவர்தன தெரிவித்துள்ளார்.

அதிகளவிலான நோயாளிகள் காணப்பட்டபோதிலும், இத்துறையில் விசேட வைத்திய நிபுணர்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக மருத்துவர் சோமவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய நிலையில், இலங்கையில் உள்ள ஒட்டுமொத்த இரத்தப் புற்றுநோயாளிகளுக்கும் சிகிச்சையளிப்பதற்காக நாடு முழுவதும் வெறும் நான்கு விசேட மருத்துவ நிபுணர்கள் மாத்திரமே பணியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உயிர்த்தியாகம்...

மறந்துவிட முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தினருக்கு முறையான கௌரவத்தை வழங்க தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவ வெற்றி தினம் தொடர்பில் பாராளுமன்றில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் உத்தியோகபூர்வமாக யுத்த வெற்றி அறிவிக்கப்பட்ட இந்நாளில், அதற்காக உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரை நாம் நன்றியுடன் நினைவு கூரவேண்டும்.

இது தமிழ் மக்களுக்கெதிரான யுத்தம் அல்ல. யுத்த வெற்றி குறித்துத் தவறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இன்று சிலர் இந்த யுத்தத்தை தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்றாகச் சித்தரிக்க முயல்கிறார்கள். ஆனால், நாம் போரிட்டது தமிழ் மக்களுடன் அல்ல, மாறாக புலிப் பயங்கரவாதிகளுடன் மட்டுமே. இந்த நாடு பயங்கரவாதத்தில் இருந்து விடுவிக்கப்பட்டதால்தான் இன்று பெரும்பான்மையான மக்கள் சுதந்திரமாக வாழ முடிகிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற பல தமிழ் மற்றும் சிங்களத் தலைவர்களின் படுகொலைகளுக்கு புலிகள் அமைப்பே காரணம். காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை மற்றும் அரந்தலாவ பிக்குகள் படுகொலை போன்ற கொடூரங்களை அவர்கள் நிகழ்த்தினர்.

அன்று சிறுவர்களின் கைகளில் சயனைட் குப்பிகளைக் கொடுத்த பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதன் விளைவாகவே, இன்று வட மாகாண மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலிடங்களைப் பெற்று சாதனை படைக்கும் சூழல் உருவாகியுள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உலகளாவிய சூழ்நிலைகள் சவால்!

## மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 20

மாறிவரும் உலகளாவிய சூழ்நிலைகள் மற்றும் வெளிப்புறக் அதிர்வுகள் காரணமாக, 2026 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் பொருளாதார வளர்ச்சி இலக்குகள் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். அண்மைய மாதங்களில் உலகப் பொருளாதாரச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறித்த கணிப்புகள் கடினமாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது உலகளவில் நிலவும் இந்த நிச்சயமற்ற தன்மைகள் இன்னும் சில மாதங்களில் சுமுக நிலைக்குத் திரும்பினால், பொருளாதார வளர்ச்சியிலான தாக்கம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும் என்றும், மாறாக இந்த நிலைமை நீடித்தால் அது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் விவரித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்து வருவதற்கு மத்திய கிழக்கில் நிலவும் நெருக்கடி நிலைமைகளும், உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருகின்றமையுமே பிரதான காரணங்கள் என ஆளுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எண்ணெய் இறக்குமதிக்காகப் பெருமளவில் வெளிநாட்டு நாணயங்களைச் செலவிடும் இந்தியா, நேபாளம், இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து போன்ற நாடுகளும் தற்போதைய உலகளாவிய சூழலால் இவ்வாறான நாணய வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளதாக அவர் உதாரணம் காட்டியுள்ளார்.

உள்நாட்டுக் காரணிகளால் பாரிய நாணய வீழ்ச்சி ஏற்பட்ட 2022ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியுடன் தற்போதைய சூழ்நிலையை ஒப்பிட முடியாது என்றும், மாற்று வீதத்தில் ஏற்படும் இத்தகைய தற்காலிக வீழ்ச்சிகளைப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர்களும், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் ஊடாக சுமார் 300 மில்லியன் டொலர்களும் எமக்குக் கிடைக்கவுள்ளதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இந்த நிதி வரவுகள் நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பை வலுப்படுத்தி, பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேண உதவும் என அவர் உறுதியளித்துள்ளார். (அ)

# சஜித் அணியின் எம்.பிக்கள் அரசுடன் இணைகின்றனரா?

## மறுக்கிறார் அஜித் பெரேரா

கொழும்பு, மே. 20

ஐக்கிய மக்கள் சக்தியின் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் இணையப் போவதில்லை என்று அக்கட்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அஜித் பி பெரேரா எம்.பி. தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, அரசாங்கத்துடன் இணையவுள்ளார் என வெளியான தகவல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"தேசிய மக்கள் சக்தி அரசாங்கமென்பது மூழ்கும் கப்பலாகும். அவ்வாறு மூழ்கும் கப்பலில் ஏறுவதற்கு நாம் தயாரில்லை.

ஹர்ஷ டி சில்வா அல்ல ஐக்கிய மக்கள் சக்தியில் எந்தவொரு உறுப்பினரும் இந்த அரசாங்கத்தில் பதவிகள் வகிக்கபோவதில்லை.

எவ்வாறான அழைப்புகள் விடுக்கப்பட்டாலும் ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தில் எவ்வித பதவியையும் வகிக்கமாட்டார். தேர்தல் காலத்தில் தங்களை மலர்கள் எனவும், எதிரணியை புற்கள் எனவும் தேசிய மக்கள் சக்தியினர் விமர்சித்தனர்.

ஆனால் தாங்கள் மலர்கள் என்பதை தற்போது அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்." எனவும் அஜித் பி பெரேரா குறிப்பிட்டார். (அ)

# சீரற்ற காலநிலையினால் 1,602 குடும்பங்கள் பாதிப்பு!

கொழும்பு, மே. 20

யாழ்ப்பாணம், புத்தளம் உட்பட 14 மாவட்டங்களில் நிலவும் மழையுடன்கூடிய சீரற்ற காலநிலையால் 5 ஆயிரத்து 300 இற்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரத்து 602 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 336 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவர் உயிரிழந்துள்ளனர். 221 வீடுகள் பகுதியளவும், ஒரு வீடு முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

புத்தளம் மாவட்டத்தில் வெள்ளத்தால் ஆயிரத்து 479 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் ஆயிரத்து 469 பேரும், களுத்துறையில் ஆயிரத்து 81 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## டித்வா சூறாவளிப் பேரழிவு:

# 171 நாள்களின் பின் மண்சரிவில் புதையுண்ட ஓட்டோ ஒன்று மீட்பு!

கொழும்பு, மே. 20

டித்வா சூறாவளி இலங்கையைத் தாக்கியபோது, ஊவா பரணகம - மஸ்பன்ன நகரப் பகுதியில் ஏற்பட்ட பாரிய மண் சரிவில் சிக்கிப் புதையுண்டிருந்த ஓட்டோ ஒன்று 171 நாள்களுக்குப் பிறகு மீட்கப்பட்டுள்ளது.

மஸ்பன்ன நகர பஸ் நிலையத்துக்கு அருகில் ஏற்பட்ட இந்த பயங்கர மண்சரிவின்போது, அங்கு நிறுத்தப்பட்டிருந்த பல பஸ்கள், மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் மற்றும் அருகில் இருந்த பல கடைகள் பெருமளவிலான மண் மற்றும் பாறைகளுக்குள் சிக்கிப் புதையுண்டன.

எனினும், அந்தப் பகுதியில் தொடர்ந்தும் நிலவி வந்த மண்சரிவு அபாயம் காரணமாக, இடிபாடுகளை அகற்றும் பணிகள் மிகவும் மெதுவாகவும் அவதானமாகவும் முன்னெடுக்கப்படவேண்டியிருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இப்பகுதியில் துப்புரவு மற்றும் மீட்புப் பணிகள் தற்போதும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தற்போது அங்கு இடம்பெற்று வரும் அகழ்வு மற்றும் துப்புரவுப் பணிகளின் போதே இந்த ஓட்டோ கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஓட்டோ வலப்பனை இலங்கை போக்குவரத்துச் சபை சாலைக்குச் சொந்தமான பஸ் நடத்துநர் ஒருவருக்குரியது என நம்பப்படுகிறது. (அ)

# பருத்தித்துறை நகர சபைத் தவிசாளருக்கு எதிரான விசாரணைகளை முன்னெடுக்க நீதிமன்று அனுமதி

## மக்கள் பிரதிநிதிகளே என்றாலும் குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட வேண்டும் என அரச சட்டவாதி வாதம்

யாழ்ப்பாணம், மே. 20

பருத்தித்துறை நகர சபைத் தவிசாளர் மற்றும் உறுப்பினருக்கு எதிராக வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு விசாரணைகளை முன்னெடுக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அதேவேளை, தவிசாளர் மற்றும் உறுப்பினர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றைத் தவறாக வழிநடத்தியுள்ளார் எனவும் மன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை தவிசாளர் மற்றும் உறுப்பினர் ஒருவருக்கு எதிராக வடக்கு மாகாண ஆளுநரால் முன்னெடுக்கப்படவிருந்த விசாரணையை இரத்துச் செய்யக் கோரி கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

மனுதாரர்களின் ஆரம்பச் சமர்ப்பணங்களை ஏற்று மன்று அன்றைய தினம் இடைக்காலத் தடைக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் சார்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி கடந்த 11ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் மன்றில் முன்னிலையாகி சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தார்.

இவ்வாறான எழுத்தாணை வழக்குகள் அனுமதிக்கப்படுவது அரச இயந்திரத்தின் செயற்பாட்டை முடக்கும். மக்கள் பிரதிநிதிகளே என்றாலும் அவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்டு முடிவுக்கு வரவேண்டுமே தவிர, அவை விசாரணையின் முன்னரே தடுக்கப்படக்கூடாது என மன்றில் வாதிட்டார்.

அத்துடன் மனுதாரர் நீதிமன்றத்தைப் பிழையாக வழிநடத்தியுள்ளமை தொடர்பிலும் தனது ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தார்.

மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி இடைக்காலத் தடைக் கட்டளையை நீடிக்கக் கோரி சமர்ப்பணங்களை முன்வைத்திருந்தார்.

அதேவேளை, "ஆளும் தரப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், இவ்விசாரணை தொடர்பான வர்த்தமானி பிரசுரிக்கப்படுவதற்கு முன்பாகவே அது பற்றி அறிந்திருந்து கருத்து வெளியிட்டார்" என மனுதாரர் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டதை அடிப்படையாகக் கொண்டே ஆரம்பத்தில் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், குறித்த விசாரணை தொடர்பான விடயம் வர்த்தமானியில் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தமை மன்றில் நிரூபிக்கப்பட்டதன் அடிப்படையில், மனுதாரர் மன்றைத் தவறாக வழிநடத்தியே குறித்த இடைக்கால நிவாரணத்தைக் கோரியிருந்தமை தொடர்பில் மன்று திருப்திப்படுகிறது.

சட்ட ஏற்பாடுகளின்படி ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை நீதிமன்றம் தன்பொறுப்பில் எடுத்து விசாரணையை மன்றில் முன்னெடுக்கமுடியாது. சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செயல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும்

மக்கள் பிரதிநிதிகளாக இருந்தாலும் அவர்களும் உரிய பொறுப்புக்கூறலைக் கொண்டிருக்கின்றார்கள் என தெரிவித்த மன்று, மனுதாரர்களால் பெறப்பட்ட இடைக்காலத் தடைக் கட்டளையை இரத்து செய்ததுடன் ஆளுநரின் விசாரணையை முன்னெடுப்பதற்குரிய அனுமதியை வழங்கி வழக்குகளை முழுமையாகத் தள்ளுபடி செய்தது. (அ)

# ஆவண சான்றளிப்பு சேவைகள் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, மே. 20

மின்னணு ஆவணச் சான்றளிப்பு அமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த ஆவணச் சான்றளிப்புச் சேவைகள், தற்போது படிப்படியாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு [illegible] அமைச்சு தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள வெளிவிவகார அமைச்சின் தூதரக விவகாரப் பிரிவில் சான்றளிப்புச் சேவைகள் வரையறுக்கப்பட்ட அளவில் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன.

இந்த அமைப்பை விரைவில் முழுமையாக மீட்டெடுப்பதற்கு [illegible] பணிகள் தொழில்நுட்பக் குழுக்களுடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சேவைகளைப் பெற்றுக் கொள்ள வழக்கத்தை விடக் கூடுதல் நேரம் எடுக்கக்கூடும் என்பதால், பொதுமக்கள் பொறுமையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.